**விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரல்'' | மீளாய்வாண்டு வரையிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காண்பதற்கு / தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | 2020 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்திலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உள்ளடக்கப்பட்டுள்ளன | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவு | நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகை திட்டம் குறித்த மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக முன்னுரிமை ஒழுங்கிலும் உரிய காலப்பகுதியிலும் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என பரீட்சிக்க முடியாமல் இருந்தது. | பெறுகை திட்டம் தயாரிக்கும் போது பெறுகை வழிகாட்டல் கோவையின் மாதிரிப் பத்திரத்தை பயன்படுத்த எதிர் பார்த்த மாதிரியை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல் கோவையின பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2013 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | சகல மேலதிக பணங்கள், நிதி அமைச்சரின் முன் அனுமதியுடனேயே நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் குறுங்கால வைப்புக்கள் என்பவற்றில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் அங்கீகாரமின்றி 2019 ஆம் ஆண்டில் ரூபா 48,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 04/2019 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பிரந்துரையின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டது. அதற்காக குறித்த திகதி அல்லது அதற்கு முன்னர் குழு அங்கீகாரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு சிக்கலாக இருந்தமையால் அத்திகதிக்கு பின்னரான 2020.01.31 ஆந் திகதி | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நடைபெற்ற 57 ஆவது நிதிக் குழுவினதும் முகாமைத்துவ குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 61,357,388 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 92,115,759 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 30,758,371 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ஊழியர் சம்பளம் ரூபா 15,378,641 ஆல் அதிகரித்தமை மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் ரூபா 7,743,969 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டு முதல் 2019 மிகையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை சீராக்கும் போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 113,171,341 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு அதிகரித்து 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 166,831,518 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் 34685 புத்தகங்களை 2019 நவம்பருக்குள் கணனி தகவல் முறைமையில் உட்படுத்த வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 15000 புத்தகங்கள் அல்லது 43 சதவீதம் மாத்திரம் தகவல் முறைமையில் சேர்க்கப்பட்டுள்ளன. | எஞ்ய 14109 புத்தகங்கள் தொடர்பான தகவல்கள் கணினி அறிக்கையாக தயாரிக்கப் பட்டுள்ளதுடன் தவறாக உள்ளீடு செய்யப்பட்டுள்ள 5600 புத்தகங்களை தகவல் முறைமையில் உள்ளடக்கு வதற்கு அல்லது கணனி அறிக்கையாக தயாரிப்பதற்கு மேலும் எஞ்சியுள்ளன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 174 மாணவர்களிடமிருந்து நிலுவை பாடநெறிக் கட்டண வருமானம் ரூபா 14,836,000 ஆக இருந்ததுடன் அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாணவர்களின் நிலுவை கட்டணங்களை செலுத்துவதற்கும் பாடநெறிகளில் மீண்டும் இணைவதற்கு வெவ்வேறு வகையில் தொடர்பாடல் மேற் கொள்ளப்பட்டு தெளிவூட்டும் செயற்பாடுகள் நிறுவகத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப் படுகின்றன. | பாடநெறிக் கட்டணங்களை குறித்த காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவகம் விரிவுரைக் கட்டணங்களை மதிப்பீடு செய்தல், கொடுப்பனவு மற்றும் நிதிஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த பேணப்படாமை காரணமாக வருடாந்தம் ரூபா 6 மில்லியன் மிகை நிதிஏற்பாடாக நிறுத்திவைத்த உழைப்புக்களுக்கு சீராக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான விரிவுரை கட்டணக் கோரிக்கைகள் கணக்குப் பிரிவிற்கு தற்போது கிடைத்து வருவதால் இந்த பிரச்சினையை விரைவில் தீர்வு செய்ய முடியும். | விரிவுரைக் கட்டணங்களுக்காக நிதிஏற்பாடு சரியான மதிப்பீட்டின் பின்னர் செய்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தினால் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 2,100,000 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்று வடிவமைப்பதற்கு சயன்ஸ்லேண்ட் இன்பொமேஷன் தனியார் கம்பனிக்கு ரூபா 1,050,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதிவரையிலும் அதன் செயற்பாடுகளை பூர்த்தி செய்து கையளிக்க் வேண்டிய போதும் அச் செயற்பாட்டை 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை. | கணக்கீட்டு கணனி செயற்பாடு தயாரிக்கும் போது அவ்வப்போது எழுந்த சிக்கல்கள் பதவியணியினரின் வேலை நிறுத்தம் மற்றும் நாட்டில் சீரற்ற நிலைமை காரணமாக மேலும் காலத்தை கடத்த வேண்டியேற்பட்டது. இவ்வாண்டு இச்செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கையின் செயற்பாடுகள் முறையான மேறபார்வை செய்யபப்ட்டு நிர்வாகத்தின் கீழ் செயற்படுத்தி குறித்த காலப்பகுதியிவல் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைளை எடுக்க வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 535,253.00 பெறுமதியான ஆராய்ச்சி நிதியமொன்று மீளாய்வாண்டில் எவ்வித கொடுக்கல் வாங்கலொன்று மேற்கொள்ளப்படாமல் நிதிக்கூற்றுகக்ளல் காணப்பிக்கப்பட்டிருந்தன. | இச்செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதாக செயன் முன்னேற்ற அறிக்கையொன்றும் நிதி அறிக்கையொன்றும் எமக்கு கிடைக்கவில்லை.அத்துடன் மானியம் வழங்கிய நிறுவனத்துடன் தொடர்பாடல் சிக்கல்களே இச்செயற்திட்டத்தின் தாமதத்திற்கான காரணமெனவும் எதிர்காலத்தில் இப்பணம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | ஆராய்ச்சி நிதியத்தை உரிய நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சேவைகளுக்காக ரூபா 3,690,000 ஆன பெறுகை செயற்பாடு மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 09 ஆந் திகதி வரை ரூபா 4,547,726 ஆன சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது அங்கீகரிக்கப்பட்ட பெறுகையை மிகைத்து ரூபா 857,726 தொகை அதாவது 23 சதவீதமாகும். | நிறுவகத்திற்கு அத்தியாவசிய சேவைகளுக்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 3,690,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அச்சேவைகளின் சந்தை பெறுமதி இலக்கிடப்பட்ட பெறுமதியினை விட கூடிய பெறுமதியொன்றை எடுத்திருந்ததால் அந்த சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது மதிப்பிடப்பட்ட செலவை விட கூடிய கிரயமொன்றை ஏற்க நேர்ந்தது. | யதார்த்தமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 30,500,000 நிர்மாண மற்றும் திருத்த பணிகளில், 52 சதவீதமான நிர்மாண மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் 2019 திசெம்பர் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளை விட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றாலும், அது போதாது என ஏற்றுக் கொள்ளலாம். திட்டமிடப்பட்ட 2 செயற் திட்டங்களுக்காக திட்டமிடல் சந்தர்ப்பத்தில் (Planning stage) மதிப்பிடப்பட்ட காலத்தை விட கூடுதலான காலமொன்றை செலவிட நேர்ந்தமையே இதற்கான காரணமாகும். | பெறுகை நடவடிக்கைகள் முன்னுரிமையின் பிரகாரம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் நிர்மாணப் பணிகளுக்காக பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பொறியியல் வடிவமைப்பு மையத்தின் (EDC) உதவியை பெற்றுக்கொள்ள தீர்மானித்தது. மதிப்பீடுகள் தயாரித்தல், கேள்வி மதிப்படு (TEC) ஒப்பந்தங்கள், ஆலோசனை சேவைகளை வழங்குதல், மதியுரை சேவைகளை வழங்குதல் மற்றும் கொடுப்பனவுகளை சான்றுறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்கு EDC பொறுப்பாகும். அதன்படி, தேசிய பெறுகை வழிகாட்டியலின் (2006) உபபிரிவு 7.3.1 இற்கு இணங்காத வகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் EDC தொடர்புபட்டிருந்தது. | தற்போது நிறுவனத்தின் நிர்மாணப் பணிகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு வேறொரு பொறியியலாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |